1981 மார்ச் 24]

அடைக்க வேண்டும் மற்ற மாவட்ட சிறைக்குள் கொண்டு போகக்கூடா தென்று சொல்லி, கைதிகளிடையே அமைதியின்மை இருப்பதால், இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கலாமென்று அரசு பரிசீலித்து வருகிறது.

சூரியகாந்தி எண்ணெய்.

*160. வினா—திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) பனைமரம், சூரியகாந்தி ஆகியவற்றிலிருந்து எண்ணெய் தயாரிக் கும் தொழிற்சாலைகள் தமிழகத்தில் உள்ளனவா ?

(இ) ஆம் எனில், எத்தனை தொழிற்சாலைகள் எங்கெங்கு உள்ளன ?

(உ) வேறு எந்தெந்த தாவரங்களிலிருந்து எண்ணெய் தயாரிக்கப்படு கிறது ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: (அ) & (இ) தமிழகத்தில் பனை மரத்திலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலைகள் இல்லை. ஆனால் சூரியகாந்தி விதையிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற்சாலை ஒன்று தர்மபுரி மாவட்டம், பூச்சம்பள்ளியில் உள்ளது.

(உ) நிலக்கடலை, தேங்காய், எள், ஆமணக்கு, பருத்திக்கொட்டை, வேப்பங்கொட்டை, முந்திரிக்கொட்டை, இலுப்பை முதலியவைகளிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது.

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்: சூரியகாந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கக்கூடிய தொழிற்சாலை தர்மபுரியில் இருப்பதாக அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போது இந்த எண்ணெய் மக்களால் பெரிதும் பயன் படுத்தக்கூடியதாக இருக்கிறது. எனவே பல மாவட்டங்களில் சூரியகாந்தியை உற்பத்தி செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். ஆகவே எங்கெல்லாம் சூரிய காந்தி இப்போது அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறதோ, அந்த மாவட்டங் களிலெல்லாம் சூரியகாந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுக்கும் தொழிற் சாலையை அமைக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: நான் ஏற்கெனவே சொன்ன ஆலை யைத் தவிர, கோவை மாவட்டத்தில் ஒண்டிப்புதூரில் 15,000 டன் சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யும் திறன்கொண்ட ஆலை ஒன்றும், தென்னாற்காடு மாவட்டத்தில் 10,000 டன் சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யும் திறன்

கொண்ட ஆலை ஒன்றும் இருக்கின்றன. இப்போது சூரிய காந்தி விதைகளுக்குப் பற்றாக்குறை இருப்பதால், அந்த ஆலைகளெல்லாம் வேறு வகையிலேயிருந்து எண்ணெய் எடுப்பதில் ஈடுபட்டிருக்கின்றன. மத்திய அரசு, டாக்டர் ராஜகோபாலன் என்பவர் தலைமையில் ஒரு குழு அமைத்து, அந்தக் குழு தமிழ் நாட்டில் சூரியகாந்தி உற்பத்தி பற்றி ஆய்வு செய்து, அதன் பெருக்கத்திற்காக ஒரு குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதுவும் அரசின் ஆய்வில் இருக்கிறது.

(முற்பகல் 10-10)

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : பனங் கொட்டைகளைப் பயன்படுத்தி எண்ணெய் எடுக்கலாமென்ற செய்தி சமீபத்தில் பத்திரிகைகளில் வந்தது. அது சாத்தியக்கூறு தானா? அரசின் கவனத்திற்கு அது வந்திருக்கிறதா? நடைமுறையில் அது சாத்தியம் தானா? அதுபற்றி அரசு ஆய்வு நடத்தியிருக்கிறதா? இதுவரையில் அப்படி ஆய்வு செய்யவில்லையெனில், இனிமேலாவது அரசு அப்படி ஆய்வு நடத்திட முன்வருமா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : இதைப்பற்றிய ஆய்வு எதுவும் அரசினுடைய பரிசிலனையில் இல்லை.

டாக்டர் இரா. சனார்த்தனம் : பனைமரத்திலிருந்து எண்ணெய் எடுப்பது அல்லது பாம் ஆயிலைப் பொறுத்தவரையில், மலேசியாவில் இத்திட்டம் மிகச் சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் இங்கேயும் எண்ணெய் எடுக்கிற நல்ல தகுதியுள்ள பனை மரங்களின் விதைகளை நடைமுறைப்படுத்தி எண்ணெய் எடுக்கப்படுமா? சூரியகாந்தி எண்ணெயில் கொழுப்புச் சத்து அதிகம் இல்லை. ஆகவே இதுபற்றிப் பிரச்சாரம் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : தமிழ் நாட்டிலுள்ள பனை மரங்கள் எண்ணெய் எடுப்பதற்குத் தகுதியில்லையென்று நாம் ஆய்வு செய்து முடிவுக்கு வந்தால், அதற்குப் பிறகு மலேசியாவிலிருந்து கொண்டு வருவது பற்றிப் பரிசீலிக்கலாம். (சிரிப்பு)

திரு. க. இராமமூர்த்தி : சூரியகாந்திப் பூவிலிருந்து எண்ணெய் எடுப்பதற்கு 3 தொழிற்சாலைகள் தமிழ் நாட்டிலே இருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். சூரியகாந்திச் செடிகளை இப்படிப்பட்ட நிலங்களிலே தான் பயிரிட வேண்டுமென்று ஏதாவது நியதி இருக்கிறதா? அந்தந்தத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய அளவு சூரியகாந்திச் செடிகளை

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 2

பயிரிடத் தேவையான நிலம் ஒதுக்கப்பட்டிருக்கிறதா? அப்படித் திட்டமிட்டு பயிரிடப்பட்டிருந்தால், தொழிற்சாலைகளுக்கு வேண்டிய சூரியகாந்திப் பூ கிடைப்பதில் பற்றாக்குறை ஏற்படும் அவசியம் இருக்காது அல்லவா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : அந்தந்த தொழிற்சாலைகளுக்கு தனித் தனியாக நிலங்கள் ஒதுக்கப்பட்டு அவை பயிரிடப்படுவதாக எனக்குத் தகவல் இல்லை. ஆனால் எங்கிருந்து அவை கிடைக்கிறதோ அங்கிருந்தெல்லாம் வாங்கப்படுகிறது. மொத்தத்தில் நமக்குத் தேவையான அளவுக்கு சூரியகாந்திப் பூ கிடைக்கவில்லை.

திரு. க. அருணாசலம் : மகாராஷ்டிராவில் சோல்பூர், பிஜப்பூர் போன்ற வட்டாரங்களில் சூரியகாந்திப் பூவைப் பயன்படுத்தி செக்கு வைத்து வாணியத் தொழில் செய்வது போல் வெற்றிகரமாக எண்ணெய் எடுத்து வருகிறார்கள். மின்சாரத்தைக் கூட செக்குகளுக்குப் பயன்படுத்தி செலவைச் சிக்கனப்படுத்தி மேலும் லாபம் அடைகிறார்கள். ஒரு தொழிலாளி 600 ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கிறான். அங்குள்ள முறையை அரசு பரிசிலித்து இங்கேயும் குறைந்த அளவு சூரியகாந்தி கிடைக்கிற இடங்களில் எல்லாம் கூட செக்கு மூலம் எண்ணெய் எடுக்கிற தொழிற்சாலையை ஏற்படுத்தி, தமிழகம் பூராவும் இது பரவல் ஆக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : சூரியகாந்தி எண்ணெய் நமக்கு இன்னும் அதிகமாகத் தேவை. தொழிலும் லாபகரமானது தான். ஆனால் நமக்குத் தேவையான அளவு சூரியகாந்தி விதை போன்றவை கிடைக்கவில்லை என்பதுதான் இப்போதிருக்கிற பிரச்சினை.

திரு. பா. ரா. தாமஸ் : உணவுக்குப் பயன்படுத்தப்படுகிற எண்ணெய் தவிர வாசனைத் திரவியங்கள் மதுரை மல்லிப் பூவிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. அதுபோல் மதுரையில் ரோஜாப் பூக்கள் நிறைய கிடைக்கின்றன. இவற்றிலிருந்து வாசனைத் திரவியங்கள் எடுப்பது குறித்து கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : பனைமரம், சூரியகாந்தி ஆகியவற்றிலிருந்து எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை பற்றியது மூலக் கேள்வி. வாசனைத் திரவியங்கள் பற்றி தனிக் கேள்வி கேட்டால், விளக்கமாகப் பதில் தர இயலும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மூலக் கேள்வி "எண்ணெய்" பற்றியதாக இருப்பதால், உறுப்பினர் வாசனைத் திரவியங்கள் பற்றி கேட்டார் போலும். (சிரிப்பு).

[1981 மார்ச் 24

திரு. சோ. ஆறுமுகம் : இலங்கையில் பனைக் கொட்டையிலிருந்து எண்ணெய் தயாரிப்பதாகத் தகவல் வந்திருக்கிறது. அதைப்போல தமிழகத்தைப் பொறுத்தவரையில், இந்த அரசு பரிசீலனை ஒன்றும் செய்யவில்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போது கள் இறக்க அரசு முடிவு செய்துவிட்ட காரணத்தால் தான், பனைக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பது பற்றி ஆராய்ச்சி, பரிசீலனை செய்யவில்லையா? (சிரிப்பு).

(பதில் இல்லை)

திரு. க. இராமமூர்த்தி : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வேறு நாட்டிலுள்ள பனை மரங்களை இங்கே வளர்த்து அதன்மூலம் பனை எண்ணெய் தயாரிப்பது பற்றிக் கருத்துரு ஒன்றும் பரிசீலனையில் இல்லையென்று சொன்னார்கள். அதேநேரத்தில் உள்நாட்டு மரங்களுடைய தரத்தைப் பற்றியும் இன்னும் முடிவு செய்யவில்லையென்றும் சொன்னார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் உள்நாட்டிலே பாம் ஆயில் உற்பத்தியைப் பெருக்க ஒரு வகை பனை மரத்தை வளர்த்திட அரசு திட்டம் தீட்டியிருக்கிறது என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கும்போது, மாண்புமிகு தொழில் துறை அமைச்சரைக் கலக்கவில்லையா? அல்லது மாண்புமிகு அமைச்சருடைய துறை தொடர்பு இல்லாமல் இயங்கிக்கொண்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : மாண்புமிகு உறுப்பினர் வாசித்த பட்ஜெட் உரையிலுள்ள எந்தப் பகுதியிலேயும் வெளி நாட்டிலிருந்து அந்தத் திட்டம் கொண்டு வரப்படுகிறது என்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. புது வகையான விதையை நடுவதற்கு ஆரம்பிக்கிறோம் என்றால், அது இந்தியாவிலேயே எங்காவது நடைமுறையில் உள்ள ஒரு விதை தான். உள்நாட்டிலுள்ள தகுதியுள்ள ஏதாவது நல்ல விதையைப் பெருக்குவதாகக் கூட அது இருக்கலாம். சிங்கப்பூரில் உள்ளதை என்றோ அல்லது மலேசியாவில் உள்ளதை என்றோ பட்ஜெட்டிலே சொல்லவில்லை. ஒரு வகை என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே அதற்கான முயற்சியில் ஈடுபடுவோம் என்று தான் சொல்லப்பட்டிருக்கிறது. உறுப்பினர் அவர்கள் கருதுகிறமாதிரி, இதிலே முரண்பாடு எதுவும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்

திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தமிழ் நாட்டிலே ஏராளமாக. அபரிமிதமான அளவுக்கு பனை மரங்கள் இருக்கின்றன. பனைக் கொட்டையிலிருந்து எண்ணெய் எடுப்பதுபற்றி ஆராய்ச்சி செய்யவில்லையென்று மாண்புமிகு

1981 மார்ச் 24]

அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். உள்நாட்டிலுள்ள பனை மரங்கள் பற்றி ஆராய்ச்சி செய்து முடிவில் வெற்றி கிடைக்கவில்லையென்று சொன்னால், அதன் பிறகு தான் வெளி நாட்டிலுள்ள பனை மரங்களை வளர்த்து அதிலிருந்து எண்ணெய் தயாரிப்பதுபற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும். அது தான் நியாயம். ஆனால் பனை மரங்கள் நம்முடைய நாட்டிலே இன்றைய தினம் ஏராளமாக, அபரிதமான அளவுக்கு இருப்பதால், ஏன் உள்நாட்டிலேயே உள்ள மரங்கள் பற்றி ஆய்வு செய்யவில்லை என்பது தான் என்னுடைய கேள்வி.

மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு : வெளி நாட்டிலுள்ள பனை மரங்கள்பற்றி ஆய்வு செய்வதாக நிதி நிலை அறிக்கையில் வாசகம் இல்லை. தவிரவும் அதுபற்றி இதுவரை ஆராயவும் இல்லை. ஆனால் இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர்கள் பனைமரத்திலிருந்து எண்ணெய் தயாரிப்பதுபற்றி மிகவும் தீவிரமாக இருப்பதால். அரசு இதுபற்றிப் பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(1) தென்னாற்காடு மாவட்டம் கடலூர் மஞ்சக்குப்பம் புனித ஜோசப் மேல் நிலைப் பள்ளியில் பள்ளி நிர்வாகியின் மீது புகார்கள் கூறி மாணவர்கள் நடத்தும் கிளர்ச்சி குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் சி. ரா. லெட்சுமிகாந்தன், க. இராமமூர்த்தி ஆகியோர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார்கள். திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன்.

*திரு. சி. ரா. லெட்சுமிகாந்தன் : தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"தென்னாற்க்காடு மாவட்டம் கடலூர் மஞ்சக்குப்பம் புனித ஜோசப் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் பள்ளி நிர்வாகியின் மீது புகார்கள் கூறி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி கிளர்ச்சி செய்வது குறித்தும், பிரச்சினை தீர வழிவகை காண்பது குறித்தும்".